தீவிரத் திட்டத்திற்காக அவர்களுடைய வரவு செலவுத் திட்டத்தில் அவர்களால் போதுமான அளவு நிதி ஒதுக்க முடியவில்லை. ஏற்கெனவே எந்த அளவு சுகாதாரப் பணிகள் நடைபெற்று வந்தனவோ அந்த அளவு தொடர்ந்து 'மெயின்டனென்ஸ்' செய்துவருவதற்காகத்தான் அவர்களுக்கு நிதி வசதி இருக்கிறது. அதனால், மலேரியாவுக்குக் காரணமாக இருக்கிற கொசுகளை ஒழிக்கும் பணிகளில் தீவிர முயற்சி நடைபெறவில்லை. 'பீஸ்மீல்' ஆக, சில்லறை முறையில் நடைபெறுவதென்பது மிக்க வெற்றியை அளிக்காது. ஆகவே, அந்தத் தீவிரத் திட்டத்திற்கு 12 இலட்ச ரூபாய்க்கு மேல் தேவைப்படும்போது மாநகராட்சி மன்றம் அந்தத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டது. பொதுவாக, மலேரியா ஒழிப்புத் திட்டச் செலவில் ஒரு பெரும் பங்கை மத்திய அரசு செலுத்துவது வழக்கம் என்ற அடிப்படையில், மாநகராட்சி அதிலே சேர்க்கப்படாத காரணத்தால், மாநகராட்சியும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று திரும்பத் திரும்ப மத்திய அரசு வற்புறுத்தப் பட்டு வருகிறது.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : கொசு ஒழிப்பு மருந்து முன்பைப் போல் கொசுவைக் கொல்லக்கூடிய சக்தியுடையதாக இல்லை, அதனால் கொசுவைக் கொல்லவில்லை என்கிற புகார் வருகிறது. மருந்துகள் ஏதாவது மாற்றப் பட்டிருக்கின்றனவா? முன்போல் சாரமுள்ள மருந்துதான் தரப்படுகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கொசுக்கள் கொல்லப்படாமலிருப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று—திரும்பத் திரும்ப சில மருந்துகள் தெளிக்கப்படும்போது, அந்தக் கொசுக்களுடைய தாங்கும் சக்தி (ரெஸிஸ்டன்ஸ் கெபாஸிடி) அதிகமாகலாம். மற்றொன்று—திரும்பத் திரும்பத் தெளிக்கும் இடத்தில் மருந்து தரம் குறைந்தும் போய்விடலாம்.

Mental hospital at Kilpauk

* 502 *Q.*—THIRU **N. DENNIS** : **Will the Hon. the Minister for Public Health be pleased to state—**

(*a*) Whether any post graduate diploma course in psychiatry is to be started at the Kilpauk Government Mental Hospital soon; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) சென்னை அரசு மனநோய் மருத்துவ மனையில் டி.பி.எம். (D.P.M.) வகுப்பு துவக்கும் செயற்குறிப்பு உள்ளது. இந்திய மருத்துவக் கழகத்தால் நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழு சென்னை மருத்துவக் கல்லூரியையும், அரசு மனநோய் மருத்துவ மனையையும் அங்கு இந்த வகுப்பு ஏற்படுத்துவதற்குள்ள வசதிவாய்ப்புகளை ஆராய்ந்துள்ளது. அதன் அறிக்கை எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : சென்னை அரசு மனநோய் மருத்துவ மனையில் அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும்? அது எவ்வளவு மதிப்பீட்டில் தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்படிப்பட்ட ஒரு படிப்பைத் தொடங்குவது என்றால், அதற்குரிய முறையில் எல்லாவிதமான முன் ஏற்பாடுகளும் செய்யக்கூடிய நிலை இருக்கிறதா என்பதை அகில இந்திய மருத்துவக் கவுன்சில்

1971 டிசம்பர் 17]

(மெடிகல் கவுன்சில்) தீர்மானிக்கவேண்டும். அவர்கள் அதை ஆராய்ந்து இன்னும் அறிக்கை அனுப்பவில்லை. அந்த அறிக்கை வந்த பிறகுதான் மற்ற விவரங்கள் அறியவரும்.

திரு. இ. எஸ். தியாகராசன் : ஒவ்வொரு மாவட்ட மருத்துவ மனையிலும் மன நோய் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மன நோய் மருத்துவம் செய்வதற்கான சிறப்புத் தகுதி உடையவர்கள் வேண்டும். மன நோய் மருத்துவப் பிரிவுகளை எல்லா இடங்களிலும் அமைப்பதென்பது எளிதல்ல. அந்தச் சிறப்புத் தகுதி உடையவர்களைக் கொண்டு இயன்ற வரையில் மாவட்ட மருத்துவ மனைகளில் மன நோய் மருத்துவப் பிரிவுகளை ஏற்படுத்த அரசு முயற்சிக்கும்.

திரு. பெ. மலைச்சாமி : மன நோய் என்னென்ன காரணங்களால் ஏற்படுகிறது என்பதை ஆராய்ந்து அறிவதற்கு சர்க்கார் ஏதாவது சிறப்பான குழுவை அமைக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பல்வேறு காரணங்களில், உள்ளத்தில் ஏற்படுகிற தகாத எண்ணங்கள் முதல் காரணம்.

திரு. கா. காளிமுத்து : மற்றத் துறைகளில் இருப்பதைப்போல் இன்று மன நோய் மருத்துவத் துறையில் போதுமான அளவு மருத்துவர்கள் இல்லை என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். போதுமான அளவு மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது, மருத்துவர்களை நியமித்தாலும் தீர்ந்துவிடுகிற பிரச்சினை அல்ல. மருத்துவர்களுக்கு ஒவ்வொரு குறிப்பிட்ட துறையில் ஆர்வம் ஏற்பட்டு அந்தத் துறையில் தனிப் பயிற்சி பெறுகிறார்கள். மன நோய் மருத்துவத் துறையை எடுத்துக்கொள்பவர்களுக்கு சமூகத்திற்குத் தொண்டு ஆற்றவேண்டும் என்கிற உணர்வு ஏற்படவேண்டும். அதுவும் வாழ்விலே அதிகமாக வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற உணர்ச்சி மிகுந்துள்ள காலத்தில், சமூகத்திற்குத் தொண்டு செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளவர்கள்தான் அந்தத் துறைக்குச் செல்லக்கூடும். எனவே, அந்த எண்ணிக்கை அவ்வளவாக இல்லை என்பது உண்மை.

திரு. எம். சுரேந்திரன் : மன நோய் சம்பந்தமாக பட்டப் படிப்பு வகுப்பு ஆரம்பிப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இப்படி ஆரம்பிப்பதை வைத்துக்கொண்டு மன நோயாளிகள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொல்லு கிறார்களா ? அல்லது, மன நோய் சம்பந்தமான நோயாளிகளின் எண்ணிக்கை வளருகிறதா என்பதை ஆராய்வதற்கு ஏதாவது வழிவகை செய்யப்பட்டிருக் கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த மன நோய் என்பது சிலருக்கு சில கட்டங்களில் ஏற்படுகிறது. நோய் ஒரு அளவு வளர்ந்ததற்குப் பின்னால் தான் 'நோயாளி' என்கிற பட்டியலில் சேர்க்கப்பட முடியும். வளருகிற கட்டம் என்பது சிலருக்கு சில நிலைகளில் முற்றுகிறது. அது முற்றியதற்குப் பின்னர் சில நேரத்தில் குறைகிறது. ஆகவே, மனநோய் என்பது அளவிட்டு வரையறுத்துக் கூறப்படக்கூடிய ஒன்றல்ல. ஆனால், நோய் கண்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படவேண்டும். அதற்குத் தனிச் சிறப்புத் தேர்ச்சி தேவைப்

படுகிறது. அந்த சிறப்புத் தேர்ச்சியும் பயிற்சியும் கிடைக்கத்தான் டி.பி.எம். (டிப்ளமா இன் சைக்யாட்டிக் மெடிசின்) என்கிற சிறப்புப் பாடம் நடத்தப்பட வேண்டும் என்று விரும்பப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, இந்த மன நோய் மருத்துவ மனைகள் மாவட்ட ரீதியாக எந்த எந்த மாவட்டங்களில் இருக்கின்றன? அவை எங்கெங்கே இருக்கின்றன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மனநோய் மருத்துவ மனை சென்னை நகரத்தில் பெரிய அளவில் இருக்கிறது. மாநிலம் முழுதுக்கும் அது பொருந்தும். தனி மருத்துவ மனைகள் இருக்கவேண்டும் என்பது ஒப்புக் கொள்ளப்படவில்லை. பெரிய மருத்துவ மனைகளில் மன நோய்க் கூறுகளை அறிந்த டாக்டர்கள் இருப்பதால், அவர்களை அகநோயாளிகளாக ஏற்றுக் கொள்ளாமல், புற நோயாளிகளாக வைத்து சிகிச்சை கொடுப்பதில் மாபெரும் வெற்றி கிடைத்திருக்கிறது என்பதை உலகம் ஒப்புக்கொள்கிறது. புற நோயாளி களுக்கு மாவட்டத் தலைமை மருத்துவ மனை அளவில் சிகிச்சை அளிக்கப்படும்.

Jaundice cases in Government Hospitals in Madras

* 503 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the total number of Jaundice cases treated both as in-patients and as out-patients in each of the Government hospitals in the City of Madras, between January to April this year, month-war; and

(*b*) the number of fatalities in Jaundice cases in each of the Government hospitals in the City of Madras, month-war from January to April 1971?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மன்றத்தின் முன் விவர அறிக்கை* யொன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது இந்தக் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டவர்களில், நான்கு மாதகாலத்தில் 1,487 பேர்கள் சிகிச்சை பெற்றவர்கள் என்றும், 35 பேர்கள் காலமானவர்கள் என்றும் சொல்லப்பட்டிருக் கிறது. இந்த நான்கு மாத காலத்தில் இவ்வளவு அதிகமாக நோய் பரவிய தற்குக் காரணம் என்ன என்று அரசு ஆராய்ச்சி செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மஞ்சள் காமாலை காண்கிற தொடக்க நிலையிலேயே சிகிச்சைக்கு வந்து, சிகிச்சை பெற்றிருந்தால், பூரண குணம் அடைந்திருக்கலாம். ஆனால், நோய் முற்றிய பின்னால் சிகிச்சைக்கு வந்தால், தாங்கும் சக்தி மிகுதியாக இராததால், நோயைத்தாங்கும் 'ப்ரோடீன்' சத்துக்கள் அடியோடு குறைந்து, இதற்குப் பின்னால் மருந்துகளை ஏற்றுக்

* 312–316-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.